# DHEERAN IAS ACADEMY®

(Specialized Institute for UPSC, SSC, TNPSC, TNUSRB and Banking)
Raj Rathna Building, Lawley Road Bus Stop, Maruthamalai Main Road, Coimbatore -03
Cell: 81783 18007, 93379 97597 Email: dheeraniasacademy@gmail.com

## நடப்பு நிகழ்வுகள் – ஜூன் 2023
## தமிழ்நாடு

- வாக்காளர் பட்டியல் காலண்டுக்கு ஒரு முறை புதுபிக்கப்பட உள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்துள்ளார்
    - **6,12,36,696 –** தமிழக வாக்காளர் எண்ணிக்கை
    - ஆண்கள் : **3,01,18,904**
    - பெண்கள் : **3,11,09,813**
    - மூன்றாம் பாலினத்தவர்கள் : **7,979**
    - இளம் வாக்காளர்கள் – **8.80** லட்சம்
    - அதிக வாக்காளர் கொண்ட தொகுதி – சோழிங்நல்லூர் (**6.51** லட்சம்)
    - குறைந்த வாக்காளர் கொண்ட  தொகுதி – சென்னை துறைமுகம் (**1.69** லட்சம்)

- சுய உதவிக் குழு தினம்
    - தமிழக அரசால் ஜீன் **3-**ம் நாள் சுய உதவிக் குழு தினமாக அறிவிக்கப்பட்டு தமிழக அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

- **11**வது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு
    - ஜீலை **7** முதல் **9**வரை சென்னை, செம்மஞ்சேரி ஆசியவியல் நிறுவனத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் சார்பில் **11**வது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற உள்ளது.
    - இதன் மையப்பொருளாக உலகமெல்லாம் தமிழோசை பரவ வேண்டும் என்பது அமைந்துள்ளது.

- கலைஞர் பன்னாட்டு அரங்கம்
    - சென்னையில் **25** ஏக்கர் பரப்பில் தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் பெயரில் சென்னையில் உலகத்தரம் வாய்ந்த பன்னாட்டு அரங்கம் உருவாக்கப்பட உள்ளது.
    - **1997-**ல் டைடல் பூங்காவை உருவாக்கி, தகவல் தொழில்நுட்பத் துறையில் புரட்சி உருவாக்கியது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

- மாநில சுகாதார குறியீடு
    - ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சகம், உலக வங்கி இணைந்து மாநில சுகாதார குறியீட்டினை வெளியிட்டுள்ளது
    - பெரிய மாநிலங்களில் கேரளா, தமிழ்நாடு, தெலுங்கானா ஆகியன முறையே முதல் மூன்று இடங்கள் பெற்றுள்ளன
    - பெரிய மாநிலங்களில் பீகார், உத்திரபிரதேசம், மத்தியபிரதேசம் ஆகியன முறையே கடைசி மூன்று இடங்கள் பெற்றுள்ளன

- சிறிய மாநிலங்களில் திரிபுரா, சிக்கிம், கோவா ஆகியன முறையே முதல் மூன்று இடங்கள் பெற்றுள்ளன
- சிறிய மாநிலங்களில் அருணாச்சலப்பிரதேசம், நாகலாந்து, மணிப்பூர் ஆகியன முறையே கடைசி மூன்று இடங்கள் பெற்றுள்ளன
- யூனியன் பிரதேசத்தில் இலட்சத்தீவு முதல் இடமும் டெல்லி கடைசி இடமும் பிடித்துள்ளன.

- பண்பாட்டு நினைவுச் சின்னங்கள்
  - தமிழ்நாட்டின் பாதுகாக்கப்பட்ட நினைவு சின்னமாக பாறைக்குளம் கிராமம் (விருதுநகர்), காளையர்குறிச்சி (சிவகாசி) குகைக்கோவில்களை தமிழக அரசு அறிவிக்க உள்ளது.

- எம்வி எம்பிரஸ் (**MV Empress)**
  - சென்னை முதல் இலங்கை வரையிலான இந்தியாவின் முதல் சர்வதேச சொகுசு கப்பல் துவங்கப்பட்டுள்ளது.

- மீண்டும் மஞ்சப்பை
  - மீண்டும் மஞ்சப்பை இயக்கத்திற்கான இணையதளம் மற்றும் செயலியை – சுற்றுச்சூழல் மற்றும் காலநிலைத் துறை அமைச்சர் அறிமுகம் செய்துள்ளார்.
  - தமிழகத்தில் மீண்டும் மஞ்சப்பை திட்டம் – **23.12.2021**-ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- காடுகளின் பரப்பு (**23.69%) – 33%**மாக உயர்த்தவும். **10** கோடி மரக்கன்றுகள்களை நடவும் **2030**-க்குள் **43%** புதுப்பிக்கத்தக்க எரிசக்கதியை பயன்படுத்தவும் இலக்கு தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

- பறை இசை மாநாடு
  - ஜீன் **18**-ல் கோவையில் ஆதித்தமிழர் இசைக்கருவியான பறையை மக்களிடம் கொண்டு சேர்க்கும் முயற்சியாக முதல் பறை இசை மாநாடு நடைபெற உள்ளது.
  - **1330** திருக்குறள் பறைப்படை  என்ற பெயரில் **1330** பறைகளை ஒரே இடத்தில் முழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

- மாநில உணவுப் பாதுகாப்பு குறியீடு – **2022 – 23**
  - இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் வெளியிட்டுள்ள மாநில உணவுப் பாதுகாப்பு குறியீட்டில் கேரளா – முதலிடமும், பஞ்சாப் – **2**வது இடமும் தமிழ்நாடு – **3**வது இடமும் பிடித்துள்ளன.

- **2**வது ராக்கெட் ஏவுதளம்
  - **2376** ஏக்கர் பரப்பளவில் நாட்டின் **2**வது ராக்கெட் ஏவுதளமானது தூத்துக்குடி மாவட்டத்தின் குலசேகரபட்டினத்தில் அமைய உள்ளது.
  - நாட்டின் முதல் ராக்கெட் ஏவுதளமானது ஆந்திரா, ஸ்ரீஹரிகோட்டாவில் அமைந்துள்ளது

- தமிழ்நாடு காவல்துறையில் மகளிர் காவலர் பிரிவு ஏற்படுத்தப்பட்டு **50** ஆண்டுகள் நிறைவடைந்தன் பொன்விழா ஆண்டு விழா நடைபெற்றது.
    - **973-**ல் கலைஞர் கருணாநிதியால் காவல்துறையில் மகளிர்க்கென தனி காவல் பிரிவு துவங்கப்பட்டது.
    - **1992-**ல் ஆயிரம் விளக்கில் ஜெ. ஜெயலலிதாவால் மகளிர்க்காக தனி காவல் நிலையம்  தொடங்கப்பட்டது.
    - தமிழகத்தின் முதல் பெண் டிஜிபியாக பதவி வகித்தவர் – லத்திகா சரண் (**2009)**
    - தமிழகத்தில் உள்ள மகளிர் காவல் நிலையங்களின் எண்ணிக்கை – **202**

- எண்ணும் எழுத்தும் திட்டம்
    - **2025-**க்குள் தமிழக மாணவர்களுக்கு அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு பெற இலக்கினை தமிழக அரசு நிகழ்த்தியுள்ளது.
    - இத்திட்டத்தினை நிகழ்கல்வியாண்டான **2023-2024**க்குள் **4, 5** வகுப்புகளுக்கும் விரிவாக்கம் செய்ய தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.
    - எண்ணும் எழுத்தும் திட்டம் – **13.06.2022**

- செறிவூட்டப்பட்ட பிஸ்கட் வழங்கும் திட்டம்
    - தமிழகத்தில் **6** மாதம் முதல் **6** வயதிற்குட்பட்ட குழந்தைகளின் சத்து குறைபாட்டை போக்க – சத்துமாவிற்கு பதிலாக செறிவூட்டப்பட்ட பிஸ்கட் வழங்கும் திட்டமானது விழுப்புரத்தில்  தொடங்கப்பட்டுள்ளது.
    - தமிழ்நாட்டில் **1.40** லட்சம் குழந்தைகள்சத்து குறைபாடு உள்ள குழந்தைகள் உள்ளன
    - இத்திட்டத்தின்படி ஆண்டுக்கு **300** நாட்கள் பிஸ்கட் வழங்கப்படுகிறது

- தமிழக தலைமை தகவல் ஆணையராக முகமது ஷகில் அக்தர்தாவும் தகவல் ஆணையர்களாக முன்னாள் ஏடிஜிபி தாமரை கண்ணன், பிரியகுமார், டாக்டர்.திருமலைமுத்து, செல்வராஜ் ஆகியோரும் பதவியேற்றுள்ளனர்
    - இவர்களது பதவிக்காலம் **3** ஆண்டுகள் அல்லது **65** வயது ஆகும்.

- இ-பெட்டகம் கைபேசி செயலி
    - மக்கள் தங்களது கல்விச் சான்றிதழ், மதிப்பெண் பட்டியல்களை பாதுகாப்பாக பகிர்வதற்கான செயலியான இ-பெட்டகம் கைபேசி செயலியை தகவல் தொழில் நுட்பவியல் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தொடங்கி வைத்துள்ளார்.

- காவலர் நலன் செயலி
    - சென்னை பெருநகர காவல் துறையால் எழும்பூரில் காவலர் மருத்துவமனை செயல்பாடுகளை அறிந்து கொள்ள உருவாக்கப்பட்டது.
    - இச்செயலிலை தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவங்கி வைத்துள்ளார்.

- கார்பன் சமநிலை மாவட்டங்கள்
    - தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை போன்ற மாவட்டங்கள் கார்பன் சமநிலை மாவட்டங்களாக தேர்வு

செய்யப்பட்டுள்ளன.
  - கார்பன் சமநிலை : பூமியிலிருந்து வெளியேற்ப்படும் கார்பனின் அளவும், உறிஞ்சப்படும் கார்பன் அளவும் சமநிலையில் இருப்பது

- தேசிய நெல் திருவிழா
  - திருவாரூர், திருத்தறைபூண்டியில் ஆதிரெங்கம் நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் பாதுகாப்பு சங்கம் சார்பில் தேசிய நெல் திருவிழாவானது கொண்டாடப்பட்டது.
  - இவ்விழாவானது விவசாயிகளை ஒருங்கிணைக்கும் வகையிலும், பாரம்பரிய நெல் வகைகளை பேணிப் பாதுகாக்கும் வகையிலும் அதற்கான விழிப்புணர்வு பற்றியும் அறியும் விதமாக தேசிய நெல் திருவிழா கொண்டாடப்படுகிறது.

- ஆதிச்சநல்லூர் அகழாய்வு
  - ஆதிச்சநல்லூரில் ஒன்றிய தொல்லியல் துறை சார்பில் நடைபெற்ற அகழாய்வு நடைபெற்றது.
  - குழந்தைகளுக்கான முதுமக்கள் தாழியில் **4** வளையங்கள் கொண்ட வெண்கல வளையல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
  - வெள்ளீயம் கலந்த **2** வெண்கல காப்பும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

- பெண் குழந்தைகளை பாதுகாக்கும் வகையில் தமிழக காவல் துறையின் வடக்கு மண்டலம் சார்பில் இமைகள் திட்டத்தினை காவல்துறை தலைமை இயக்குர் சைலேந்திர பாபு தொடங்கி வைத்தார்
  - பெண் காவலர்க்கான அவள் திட்டமானது **17.03.2023**-ல் தொடங்கப்பட்டுள்ளது.
  - குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சட்டமான போக்சோ சட்டம் **2012**-ல் அமலுக்கு வந்தது
  - தமிழகத்தில் காவலன் **SOS** செயலி **29.02.2019**-ல் அறிமுகம் செய்யப்பட்டது.

- சிற்பி திட்டம் (**SIRPI) –** சான்றிதழ்
  - தமிழக முதல்வர் சிற்பி திட்டத்தின் கீழ் பயிற்சி நிறைவு செய்த **5000** மாணக்கர்களுக்கு சான்றிதழ் வழங்கியுள்ளார்
  - **SIRPI – Students in Responsible Police Initiatives –**
  - **14.09.2022**-ல் இத்திட்டம் தமிழக காவல் துறையால் மாணவர்களை நல்வழிப்படுத்த உருவாக்கபட்டது.

- தொழுநோய் பாதிப்பு இலக்கு
  - தமிழக அரசானது தொழுநோய் ஒழிக்க **2030**-ஆம் ஆண்டை இலக்ககாக நிர்ணயித்துள்ளது
  - முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியால் வெண்குஷ்டம் பெயர் வெண்புள்ளிகளென **2010**-ல் மாற்றியமைக்கப்பட்டது.
  - உலக வெண்புள்ளிகள் ஒழிப்பு தினம் – ஜூன் **25.**

- மாநில பறவைகள் ஆணையம்

- தமிழக அரசானது சரணாலயங்கள் பராமரித்தல், சரணாலயங்கள் பற்றிய முக்கிய முடிவுகளை மேற்கொள்ள **9** பேர் அடங்கிய ஆணையத்தை தொடங்கி வைத்தார்
- இதன் தலைவராக சுப்பிரியா சாகு நியமிக்கப்பட்டுள்ளார்.

- **2**ம் கட்ட அகழாய்வு
  - திருநெல்வேலி மாவட்டம் துலுக்கர்பட்டியில் நடைபெற்ற **2**ம் கட்ட அகழாய்வில் **400** தொல்லியல் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
  - அதில் புலி என்ற எழுத்துடன் கூடிய கருப்பு, சிவப்பு நிறத்தாலான பானை ஓடு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.
  - இக்கண்டுபிடிப்பு ஆதிச்சநல்லூர் பண்பாட்டின் காலத்தை நிலை நிறுத்துவதற்கான சான்றாக அமைய உள்ளதாக தெரிவிக்கப்பட்டள்ளது

- முன்னாள் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு ஓய்வு பெற்றதையடுத்து தமிழக அரசின் புதிய தலைமைச் செயலராக சிவ்தாஸ் மீனா பதவியேற்றுள்ளார்.

## இந்தியா

- உத்திரபிரதேசம் – பள்ளி சுகாதாரத் திட்டம்
  - உத்திரப்பிரதேசத்தில் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை மற்றும் லக்னோ திறன்மிகு நகரம் இணைந்து பள்ளிக் குழந்தைகளுக்கான டிஜிட்டல் சுகாதார அட்டைகள் வழங்க உள்ளது.
  - உடல் மற்றும் மனநலம் குறித்த பள்ளிக் குழந்தைகளுக்கான டிஜிட்டல் சுகாதார அட்டைகள் வழங்கும் முதல் மாநிலம் என்ற பெருமையை உத்திரபிரேதேசம் பெறுகிறது

- மகாராஷ்டிராவின் ஸ்வச் முக் அபியான் திட்டத்தின் புன்னகை தூதராக சச்சின் டெண்டுல்கர் நியமிக்கப்பட்டுள்ளார்
  - ஸ்வச் முக் அபியான் என்பது பற்களின் ஆரோக்கியம், சுகாதாரம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த இந்திய பல் மருத்துவ சங்கத்தால் உருவாக்கப்பட்ட பல் சுகாதார இயக்கம் ஆகும்.

- கர்நாடாக மாநில சுற்றுசூழல் தூதராக சாலுமரத திம்மக்கா நியமனம் செய்யப்பட்டுள்ளார்
  - இவர் இதுவரை 385 ஆலமரங்களை நட்டுள்ளார்
  - முந்தைய அரசு கொடுத்த கேபினட் அமைச்சர் அந்தஸ்தினை தற்போதைய அரசு நீட்டிப்பு செய்துள்ளது.
  - மத்திய அரசால் 2019 பத்ம ஸ்ரீ விருது வழங்கப்பட்டுள்ளது.
  - ❖ தொடர்புடைய செய்திகள்
  - தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை விளம்பர தூதராக மகேந்திர சிங் தோனி நியமிக்கப்பட்டுள்ளார்.
  - திரிபுரா மாநில சுற்றுலா துறை தூதராக சௌரவ் கங்குலி நியமனம் செய்யப்பட்டுள்ளார்
  - இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக எரிக் கார்செட்டி நியமனம்

செய்யப்பட்டள்ளார்.

- கிராமப்புற இந்தியாவிற்காக பன்மொழி செயற்கை நுண்ணறிவு உரையாடு மென்பொருளை மைக்ரோ சாஃப்ட் நிறுவனம் – சென்னை ஐஐடி (**A14Bharat)** இணைந்து உருவாக்கியுள்ளது.

- இந்திய சட்ட ஆணையம் பரிந்துரை
    - இந்திய சட்ட ஆணையம் தேச துரோக குற்றவாளிகளுக்கு சிறை தண்டனை **7** ஆண்டுகளாக உயர்த்த பரிந்துரைத்துள்ளது.
    - இந்திய தண்டனை பிரிவுச் சட்டம் **124A**ன் படி **3** ஆண்டுகள் சிறை அல்லது ஆயுள் சிறை அல்லது அபராதத்தொகை இருந்து வந்தது.

- அனுசுயா உய்கே
    - மணிப்பூர் மாநில ஆளுநர் அனுசுயா உய்கே தலைமையில் மணிப்பூர் மாநில வன்முறைக்கு தீர்வு காண குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

- பி.எம் ஸ்வாநிதி திட்டம்
    - வீட்டுவசதி மற்றும் நகர்புற விவகாரங்கள் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் பி.எம் ஸ்வாநிதி திட்டம் **2024** டிசம்பர் வரை நீட்டிக்கப்பட்டள்ளது.
    - இத்திட்டம் தெருவோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்திற்காக பிணையில்லா குறுங்கடன் வழங்க உதவுகிறது.
    - பிஎம் ஸ்வாநிதி செயலி (**PM SVANidhi)**
    - தெருவோர வியாபாரிகளுக்கான கடன் வழங்கும் செயல் முறையை எளிதாக்கும் வகையில் பிஎம் ஸ்வாநிதி செயலி (**PM SVANidhi)** அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- லைப் முன்முயற்சி
    - சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறைக்கான முன்முயற்சி திட்டமே லைஃப் முன்முயற்சி திட்டம் ஆகும்.
    - இத்திட்டம் காலநிலை மாற்றத்திற்கு எதிராக போராடுவதற்கு உதவுகிறது.
    - இதற்கான முதல் விருது வீட்டு பயன்பாட்டு பேட்டரிகள் மறுசுழற்சி முறைக்காக வழங்கப்பட்டுள்ளது
    - சென்னை ராமாபுரம் எஸ்ஆர்எம் ஈஸ்வரி பொறியல் கல்லூரி, ராமலெட்சுமி பொறியியல் கல்லூரி மாணவர்க்கு வழங்கப்பட்டுள்ளது.

- **SAIL** இன் தலைவராக அமரேந்து பிரகாஷ் நியமனம் செய்ப்பட்டுள்ளார்.
    - **SAIL – Steel Authority of India**
    - **1973** ஜனவரி **24-**ல் **SAIL**ன் தலைமையகம் புதுதில்லியில் உருவாக்கப்பட்டுள்ளது.

- அம்ரித் தரோகர் திட்டம்
    - அம்ரித் தரோகர் திட்டம் என்பது சதுப்பு நிலங்களை பாதுகாக்க மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட திட்டம்.

- மிஷ்டி திட்டம்
    - மாங்குரோவ் காடுகளை பாதுகாக்கும் திட்டமான மிஷ்டி திட்டம் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

- டார்பிடோ குண்டு
    - இந்திய கடற்படை, இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கழகத்தால் உள்நாட்டிலேயே தயாரிக்கப்ட்ட குழாய் வடிவ நீர் மூழ்கி குண்டான டார்பிடோ குண்டு சோதனை வெற்றியடைந்துள்து

- உலக அழகி போட்டி
    - **2023-**ம் ஆண்டிற்கான **71**வது உலக அழகி போட்டியானது இந்தியாவில் நடைபெற உள்ளது
    - கடந்த முறை **1996-**ல் இப்போட்டி நடைபெற்றது.
    - **27** ஆண்டுகளுக்கு பிறகு இப்போட்டி இந்தியாவில் நடைபெற உள்ளது
- தேவாங்கனம் ஷாருஹரித்தம்
    - கேரளாவில் **3,800** கோவில்களை பசுமைக் கோவில்களாக மாற்றும் திட்டமான கடவுளின் புனித பசுமை இல்லங்கள் (தேவாங்கனம் ஷாருஹரித்தம்) கேரளாவில் தொடங்கப்படுகிறது.
    - பருவநிலை மாற்றம், பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் மோசமான விளைவுகளை எதிர்கொள்ளும் விதமாக தொடங்கப்பட்டுள்ளது

- பாதுகாப்பான கேரளம்
    - சாலைகளில் செயற்கை நுண்ணறிவு கேமராக்களை பொருத்தி வாகனங்கள் இயக்கங்கள் கண்காணிக்கும் திட்டமானது கேரளாவில் தொடங்கப்பட்டுள்ளது
    - இத்திட்டமானது பாதுகாப்பான கேரளம் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது
    - 2020-ல் இதற்கான ஒப்பந்தம் கெல்ட்ரான் நிறுவனத்திற்கும் கேரள அரசிற்கும் இடையே கையெழுத்தானது குறிப்பிடத்தக்கது.

- டிஜிட்டல் பரிவர்த்தனை **2022**
    - டிஜிட்டல் பரிவர்த்தனையில் உலக அளவில் இந்தியா (**8.95** கோடி) முதலிடம் பிடித்துள்ளது.
    - இரண்டாவது இடம் பிரேசிலும் மூன்றாவது இடம் சீனாவும் பிடித்துள்ளன.

- மகீர் திட்டம் (**MAHIR Scheme)**
    - மின்சாரம் துறையில் புதிய கண்டுபிடிப்புகளை கண்டறிந்து பயன்படுத்தும் திட்டமானது மகீர் என்ற பெயரில் உருவாக்கப்பட்டது
    - **MAHIR – Mission on Advanced High Impact Research**

- சக்தி திட்டம்
    - கர்நாடாகாவில் அரசுப்பேருந்துகளில் மகளிர் இலவச பயணம் செய்யும் திட்டமான



SHEERAN IAS ACADEMY

- சக்தி திட்டத்தினை அம்மாநில முதல்வர் சித்தராமைய்யா தொடங்கி வைத்துள்ளார்
- இத்திட்டத்தில் நிரந்தர பயனாளியாக நீடிக்க சேவாசிந்து இணையதளம்  தொடங்கப்பட்டுள்ளது.

➢ கூட்டு இராணுவ பயிற்சி – உத்திரகாண்ட்
- இந்தியா – மாலத்தீவு இடையே ஈக்வெரின் எனும் **12**வது கூட்டு இராணுவ பயிற்சி நடைபெற்றுள்ளது.

➢ **UIDAI**
- **UIDAI**யின் தலைமை நிர்வாக அதிகாரியாக அமித் அகர்வால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- **UIDAI – Unique Identification Authority of India – 28.01.2009**
- ஆதார் சட்டம் **2016**-ல் கொண்டு வரப்பட்டது
- **12** இலக்கம் கொண்ட ஆதார் எண் முதன் முதலாக மகாராஷ்டிராவில் **29.09.2010**-ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

➢ **50**வது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம்
- ஜூலை **11**-ல் புதுதில்லியில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் **50**வது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் நடைபெற உள்ளது.
- **2016 –** அரசியலமைப்புச் சடத்தின் **122**வது சட்டத்திருத்தத்தின்படி ஜி.எஸ்.டி அமலுக்கு வந்தது
- **01.07.2017**-ல் நடைமுறைக்கு வந்தது.

➢ டானி பானி திட்டம்
- எல்லையாேரம் பறவைகளுக்கு தண்ணீரும், உணவும் வழங்கும் திட்டமான டானி பானி திட்டம் எல்லை பாதுகாப்பு படையால் (**BSF)** தொடங்கப்பட்டது
- **BSF – Border Security Force**
- **1965**-ல் தொடங்கப்பட்ட **BSF**-ன் தலைவராக நித்தின் அகர்வால் உள்ளார்

➢ ஜி-**20** அறிவியல் மாநாடு
- போபாலில் ஜி-**20** அறிவியல் மாநாடானது **One Earth One Family One Future** எனும் கருப்பொருளுடன் நடைபெற்றது.

➢ பல்கலைக்கழக சட்ட மசோதா – **2023**
- மாநில அரசு பல்கலைக்கழகங்களில் வேந்தராக ஆளுநருக்கு பதிலாக முதலமைச்சர் வேந்தராக பதவி வகிக்கும் சட்டமசோதாவான தி பஞ்சாப் பல்கலைக்கழக சட்ட மசோதா – **2023**வானது பஞ்சாப் சட்டப்பேரவை நிறைவேற்றப்பட்டுள்ளது.

➢ யோக தின நிகழ்வு
- சர்வதேச யோகா தினத்தினை (ஜூன்-**21)** முன்னிட்டுஐ.நா.தலைமையகத்தில் நடைபெற உள்ள யோக தின நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கிறார்.

- அமெரிக்க நாடாளுமன்ற கூட்டு கூட்டத் தொடரில் **2**வது முறையாக உரையாற்றியுள்ளார்
    - இதன் மூலம் அமெரிக்க நாடாளுமன்றத்தில் **2**வது முறையாக உரையாற்றிய முதல் இந்தியர் என்ற பெருமையை பெற்றுள்ளார்

- ஜி20 – மாமல்லபுரம்
    - மாமல்லபுரத்தில் ஜி20 நாடுகளின் 3வது மகளிர் மாநாடானது பெண்கள் தலைமையிலான வளர்ச்சி, மாற்றம், செழிப்பு மற்றும் முன்னேற்றம் எனும் மையப்பொருளுடன் நடைபெற்றது.
    - ஜி20 நாடுகளின் முதலாவது மகளிர் மாநாடனது ஜெய்ப்பூரில் நடைபெற்றது.
    - ஜி20 நாடுகளின் இரண்டாவது மகளிர் மாநாடனது அவுரங்கபாத்தில் நடைபெற்றது.

- சுரேஷ் ஸ்ரீ வாஸ்தா
    - உலக ஐ.நா. கூட்டமைப்புகள் சம்மேளன துணைத் தலைவராக சுரேஷ் ஸ்ரீ வாஸ்தா தேர்வாகியுள்ளார்.

- தோல் வங்கி
    - புதுதில்லியில் வட இந்தியாவின் முதல் தோல் வங்கி அமைக்கப்படுகிறது.

- உலக பாலின  இடைவெளி குறியீடு 2023
    - 2023-ம் ஆண்டுக்கான உலக பாலின  இடைவெளி குறியீட்டில் முதலிடம் ஐஸ்லாந்தும்,  இரண்டாமிடம் நார்வேயும், மூன்றாமிடம் பின்லாந்தும் பிடித்துள்ளன.
    - கடைசி இடமான 146வது இடத்தை ஆப்கானிஸ்தான் பிடித்துள்ளது.
    - இப்பட்டியலில் இந்தியா 127வது இடத்தை பிடித்துள்ளது.

- ஜி20 மாநாடு
    - புனேவில் ஜி20 உறுப்பு நாடுகளின் 4வது கல்வி அமைச்சர் கூட்டம் நடைபெற்றுள்ளது.
    - இதன் முதல் மூன்று கூட்டங்கள் முறையே சென்னை, அமிர்தசரஸ், புவனேஸ்வர் ஆகிய நகரங்களில் நடைபெற்றுள்ளன
- நிதிசார் செயல்பாட்டு மையம்.
    - கூகுள் நிறுவனமானது குஜராத்தில் உலகளாவிய நிதிசார் மேம்பாட்டு மையம் அமைக்க உள்ளது.

- தமிழ் இருக்கை
    - அமெரிக்காவின் ஹூஸ்டன் பல்கலைக் கழகத்தில் தமிழ்இருக்கை அமைக்கப்பட உள்ளதாக பிரதமர் மோடி அறிவித்தார்.

- ஹைட்ரஜன் ரயில்
    - 24.03.2024-ல் ஹரியானாவில் இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் ரயில்



DHEERAN IAS ACADEMY

தொடங்கப்பட உள்ளது
    - ஜிந்த் முதல் சோனிபட் வரை இயக்கப்படுகிறது
    - உலகின் முதல் ஹைட்ரஜன் ரயிலானது ஜெர்மெனியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது

- ஆபரேஷன் கவாச் (**Operation Kawch**)
    - போதைப்பொருள் பழக்கத்தின் அச்சுறுத்தலில் இருந்து இளைஞர்களையும், சிறுவர்களையும் பாதுகாக்கும் திட்டத்தை டெல்லி காவல் துறை ஆபரேஷன் கவாச் என்னும் பெயரில் அறிமுகம் செய்துள்ளது.

- புழல் சிறை
    - இந்தியாவில் முதல் முறையாக புழல் சிறையில் பெண் கைதிகளால் இயக்கப்படும் முதல் பெட்ரோல் பங்க்கானது திறக்கப்பட்டள்ளது

- சாலை கட்டமைப்பு வசதி
    - முதலிடம் அமெரிக்காவும், இந்தியா – இரண்டாம் இடமும் (1,45,240 கி.மீ) பிடித்துள்ளன
    - இந்தியாவானது கடந்த 9 ஆண்டுகளில் 59% சாலை கட்டமைப்பு வளர்ச்சி பெற்றுள்ளது
    - பாஸ்டேக் பயன்பாட்டால் சுங்கச்சாவரி காத்திருப்பு நேரமானது 47 வினாடியாக குறைக்கப்பட்டுள்ளது. இதனை 30 வினாடியாக குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு – 2023
    - 2023ற்கான ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு இந்தியா தலைமையில் நடைபெறுகிறது
    - இந்தியா சீனா, ரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், பாகிஸ்தான் போன்ற நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன.
    - ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் தலைமையகமான சீனாவின் பெய்ஜிங்கில் மினி இந்தியா போன்ற இந்திய அறை புது தில்லி ஹால் எனும் பெயரில் திறக்கப்பட உள்ளது.

**சர்வதேச நிகழ்வுகள்**

- பிரிக்ஸ் கூட்டமைப்பு
    - தென்னாப்பிரிக்காவின் தலைநகரான கேப்டவுனில் நடைபெறும் பிரிக்ஸ் கூட்டமைப்பின் (**BRICS**) வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் இந்திய வெளியுவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பங்கேற்றுள்ளார்.
    - 16 ஜீன் 2009-ல் உருவாக்கப்பட்ட **BRICS** கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகள்
        - **B –** பிரேசில்
        - **R –** ரஷ்யா
        - **I –** இந்தியா
        - **C –** சீனா

- **S –** தென்னாப்பிரிக்கா
- பிரிக்ஸ் (**BRICS)** என்ற இச்சொல்லை ஜிம் ஓ' நீல் (**Jim O'Neill)** என்ற பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர் உருவாக்கியுள்ளார்.

➢ லிதுவேனியா
- ஜூலை **11-12** வரை லிதுவேனியா நாட்டின் தலைநகரான விலினியஸில் **2023-**ம் ஆண்டிற்கான நேட்டோ உறுப்பு நாடுகளின் தலைவர்கள் மாநாடு நடைபெற உள்ளது.

➢ செலஸ்டி சௌலோ
- உலக வானிலை அமைப்பின் முதல் பெண் செயலாளராக செலஸ்டி சௌலோ தேர்வாகியுள்ளார்

➢ ஐக்கிய அரபு எமிரேட்ஸ்
- உலக வானிலை அமைப்பின் (**WMO)** தலைவராக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நியமிக்கப்பட்டுள்ளது.
- **WMO – World Meteorological Organisaiion**
- **1950-**ல் உருவாக்கப்பட்ட **WMO**வின் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் உள்ளது.

➢ உலக பாதுகாப்பு கூட்டமைப்பு **2025**
- **IUCN** சார்பில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ்**,** அபுதாபியில் உலக பாதுகாப்பு கூட்டமைப்பு **2025** நடைபெற உள்ளது.
- **IUCN – International Union for Conservation of Nature**
- உருவாக்கப்பட்ட தினம் : **5** அக்டோபர்**, 1948**
- தலைமையிடம் : கிளான்ட்**,** சுவிட்சர்லாந்து

➢ முதல் ஹிந்து அமெரிக்க உச்சி மாநாடு
- வெளிநாடு வாழ் இந்தியர் அமைப்பு மற்றும் அமெரிக்கன்ஸ் ஃபார் ஹிந்துஸ் குழு சார்பில் அமெரிக்கா நாடாளுமன்ற கீழவையில் முதல் ஹிந்து அமெரிக்க உச்சி மாநாடு நடத்தப்படுகிறது.

➢ நிதின் அகர்வால்
- **BSF-**யின் தலைமை இயக்குநராக நிதின் அகர்வால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்
- Border Security Force (BSF) 1965**-**ல் உருவாக்கப்பட்டது

➢ இந்தியாவிற்கான அந்நிய நேரடி முதலீடு
- ரூ.1.41லட்சம் கோடி மதிப்பில் சிங்கப்பூர் முதலிடம் பிடித்துள்ளது
- ரூ.**50** ஆயிரம் கோடி மதிப்பில் மொரிசீயஸ் இரண்டாவது இடமும்**,** ரூ.**49** ஆயிரம் கோடி மதிப்பில் அமெரிக்கா மூன்றாவது இடமும் ரூ.**27,500** கோடி மதிப்பில் ஐக்கிய அரபு அமீரகம் நான்காவது இடமும் பிடித்துள்ளன.

## விருதுகள்

- சர்வதேச புக்கர் பரிசு 2023
    - அல்சைமர் நோய் குறித்த நாவலான டைம் ஷெல்டல் நாவலை எழுதிய பல்கேரிய எழுத்தாளர் ஜார்ஜி கோஸ்போடினோனுவுக்கும் அந்நூலை மொழிபெயர்த்த ஏஞ்சலா ரோடெலுக்கு 2023-ம் ஆண்டிற்கான சர்வதேச புக்கர் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

- சாமண்டஹள்ளி பஞ்சாயத்து
    - தர்மபுரி மாவட்டத்தின் சாமண்டஹள்ளி பஞ்சாயத்திற்கு நுண்ணீர் பாசன திட்டத்தை முழுமையாக செயல்படுத்தியற்காக துளிநீரில் அதிக பயிர் திட்ட தேசிய விருது மத்திய வேளாண் துறை சார்பில் வழங்கப்பட்டது.

- சக்திகாந்த தாஸ்
    - **RBI** ஆளுநர் சக்திகாந்த தாஸ்-கு சிறந்த ஆளுநர் விருதானது சென்ட்ரல் பேங்கிங் சார்பில் வழங்கப்பட்டது.
    - **RBI – Reserve Bank of India**
    - தொடங்கப்பட்ட ஆண்டு – **1935**
    - நாட்டுடமையாக்கப்பட்ட ஆண்டு – **1949**
    - தலைமையகம் – **1935-**ல் கல்கத்தா – **1937-**லிருந்து மும்பை

- **2023** ஆண்டுக்கான இளம் எழுத்தாளர்களுக்கான யுவ புரஸ்கார் விருது **20** எழுத்தாளர்களுக்கு சாகித்திய அகாதெமி அமைப்பு அறிவித்துள்ளது.
    - தமிழகத்தின் நாகர்கோவிலின் இளம் எழுத்தாளர் ராம் தங்கத்திற்கு அவர் எழுதிய திருக்கார்த்தியல் சிறுகதைக்காக வழங்கப்பட உள்ளது.

- பால சாகித்திய புரஸ்கார் விருது **2023**
    - **2023** ஆண்டுக்கானசிறுவர் இலக்கியத்துக்கான பால சாகித்திய புரஸ்கார் விருது **22** எழுத்தாளர்களுக்கு சாகித்திய அகாதெமி அமைப்பு அறிவித்துள்ளது.
    - தமிழகத்தின் கோவில்பட்டியினை சார்ந்த உதயசங்கருக்கு அவர் ஆதனின் பொம்மை என்ற நாவலுக்காக வழங்கப்பட உள்ளது.
    - சாகித்திய அகாதெமி விருது **1954** முதல் அங்கீகரிக்கப்பட்ட **24** மொழிகளின் சிறந்த இலக்கிய படைப்புகளுக்கான விருதுகளை வழங்கி வருகிறது

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- அக்னி 1 ஏவுகணை
    - ஓடிசாவிலுள்ள ஏ.பி.ஜே. அப்துல்கலாம் தீவில் நடத்தப்பட்ட நடுத்தர தொலைவு பாலிஸ்டிக் ஏவுகணையான அக்னி 1 ஏவுகணை சோதனை வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ளது.

- 700 கி.மீ முதல் 3,500 கி.மீ. தொலைவு வரைபாய்ந்து சென்று தாக்கும் திறனுடையது.

➢ ஆல்கா புதிய இனம்
  - மகாராஷ்டிரா, மகாபலேஷ்வரில் ஒளிச்சேர்க்கையின் போது வளிமண்டத்திற்கு ஆக்ஸிஜன் வழங்குகின்ற டயட்டம் எனப்படும் ஒற்றை செல் ஆல்காவின் புதிய இனம் கண்டுபிடிப்பு
  - இதற்கு புவிசார் தொல் பொருள் ஆராய்ச்சியாளர் எஸ்.என்.இராஜகுரு நினைவாக கோம்போநிமா இராஜகுருயி (**Gomphonema Raja Guruii)** எனும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

➢ விஎல்ஏ-**1553 (VLA-1553)**

➢ சிக்கன்குன்யா நோய்க்கான முதல் தடுப்பூசியானது பிரான்ஸின் வால்நோவா நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.
  - சிக்கன்குன்யா நோயானது முதன் முதலாக **1952-**ல் தான்சானியா நாட்டில் கண்டறியப்பட்டது
  - இந்நோயானது ஏடீஸ் வகை கொசுக்களால் பரவுகிறது.

## விளையாட்டு நிகழ்வுகள்

➢ ஓமன் நாட்டின் சலாலா நகரில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் ஹாக்கி கோப்பை போட்டியில் இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது
  - இந்தியா **2004, 2008, 2015** ஆண்டுகளை தொடர்ந்து நான்காவது முறையாக சாம்பியன் (**2023)** பட்டத்தை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது
  - இவ்வெற்றியின் மூலம் ஜூனியர் உலககோப்பை ஹாக்கி போட்டியில் விளையாட இந்திய அணி தகுதி பெற்றுள்ளது.

➢ பிரதீப்குமார் பானர்ஜி
  - இந்திய கால்பந்து வீரரான பிரதீப்குமார் பானர்ஜியின் பிறந்த நாள் அகில இந்திய கால் பந்து கூட்டமைப்பு தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

➢ **ICC** நடத்தும் ஒருநாள் கிரிக்கெட் உலககோப்பை கிரிக்கெட் போட்டி-**2023** இந்தியாவில் நடைபெற உள்ளது.
  - **ICC – International Cricket Council**

➢

## முக்கிய நாள்கள்

➢ உலக பால் தினம் (**World Milk Day) June –** 01
  - கருப்பொருள் : "**Enjoy Dairy"**

➢ உலக சுற்றுபுற சூழல் தினம் (**World Enviroment Day) – June –** 05
  - கருப்பொருள் : "**Solutions to Plastic Pollution"**

- தமிழ் மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்ட தினம் – **June –** 06
    - இந்தியாவின் முதல் செம்மொழியாக தமிழ் மொழி ஜீன் 06, 2004-ல் அறிவிக்கப்பட்டது
    - 2004-ம் ஆண்டு இந்திய அரசு செம்மொழிகள் புதிய வகைப்பாட்டினை ஏற்படுத்தியது.
    - இந்திய அரசியலமைப்பில் மொழிகள் 8வது அட்டவணையில் இடம் பெற்றுள்ளன
    - இந்திய அரசியலமைப்பில் மொழிகள் **XVII**இல் 343லிருந்து 351 வரை சட்டபிரிவுகள் அலுவலக மொழியை பற்றி விவரிக்கின்றன.
    - சமஸ்கிருதம் (2005), தெலுங்கு, கன்னடம் (2008), மலையாளம் (2013), ஒடியா (2014) ஆகிய மொழிகள் இதுவரை செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டன.
- உலக உணவு பாதுகாப்பு தினம் (**World Food Safety Day) – June –** 07
    - கருப்பொருள் : "**Food standards save lives"**

- உலக பெருகடல்கள் தினம் (**World Oceans Day) – June –** 08
    - கருப்பொருள் : "**Planet Ocean: The Tides are Changing."**
- உலக காற்று தினம் (**Global Wind Day) – June** 15
    - கருப்பொருள் : "**Give blood, give plasma, share life, share often"**

- சர்வதேச யேகா தினம் (**International Yoga Day) – June** 21
    - கருப்பொருள் : "வசுவைத குடும்பத்திற்கான யோகா"

- சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிபா) வெளியிட்டுள்ள தரவரிசை பட்டியலில் இந்தியா 100வது இடம் பிடித்துள்ளது.
    - முதல் மூன்று இடங்கள் முறையே அர்ஜென்டினா, பிரான்ஸ், பிரேசில் பிடித்துள்ளன
- 

DHEERAN IAS ACADEMY